செ.வெ.எண்: 52 நாள்:24.10.2016

**புதுக்கோட்டை மாவட்டத்தில் மழை, வெள்ளக்காலங்களில் ஏற்படும் பாதிப்புகளை தடுக்கும் வகையில் கண்மாய்கள் மற்றும் குளங்களில் ஆக்கிரமிப்புகள் இல்லாமல் கண்காணிக்க வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வடகிழக்கு பருவமழை 2016 முன்னிட்டு நமது மாவட்டத்தில் புயல், வெள்ளக்காலங்களில் மேற்கொள்ளப்படவேண்டிய தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த சிறப்பு ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (24.10.2016) நடைபெற்றது.

இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த சிறப்பு ஆய்வுக்கூட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து கூறியதாவது:

தமிழகத்தில் 2016ம் ஆண்டிற்குரிய வடகிழக்கு பருவமழை தீவிரமாக தொடங்கவுள்ள நிலையில் தமிழகஅரசு பொதுமக்களை வெள்ள பாதிப்புகளிலிருந்து பாதுகாக்கும் வகையில் மழை மற்றும் வெள்ளத்தினால் பாதிப்பு ஏற்படக்கூடிய நிகழ்வுகள் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து ஆய்வுக்கூட்டங்கள் நடத்த உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் புயல், வெள்ளக்காலங்களில் மேற்கொள்ளப்படவேண்டிய தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த சிறப்பு ஆய்வுக்கூட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் வருவாய்த்துறை, பொது சுகாதாரத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அலுவலர்கள் உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் பொதுசுகாதாரத்துறை தொடர் மழை மற்றும் வெள்ள சேதங்களின் போது ஏற்படும் தொற்று நோய்களுக்கான தடுப்பு மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி, நீர் நிலைகளில் குடிநீரில் கலக்கப்படும் குளோரின் இருப்பு போன்ற பல்வேறு மருந்துகளை போதிய அளவு இருப்பு வைக்கவும், அனைத்து மண்டல அலுவலர்களும் தங்களின் கீழ் பணிபுரியும் அலுவலர்களின் முகவரி மற்றும் அலைப்பேசி எண்கள் குறித்த விபரத்தை வைத்துக்கொள்ளவும், வெள்ள சேதங்களின் போது எடுக்கப்பட வேண்டிய தடுப்பு பணிகள் மற்றும் பொதுமக்களை அப்புறப்படுத்துதல் போன்ற பணிகளின் போது மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்த விபரங்களை தெரிந்து கொள்வதுடன் தங்களுடன் இணைந்து பணியாற்றக்கூடிய பிறத்துறை அலுவலர்களுடன் தகவல் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

மேலும் ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் தொடர் மழை மற்றும் பெருவெள்ளக்காலங்களில் தாழ்வான பகுதிகளிலுள்ள நீர்நிலைகள் மற்றும் நீர்த்தேக்கங்களில் கரைகளை பலப்படுத்துதல் குறித்து மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள், சிறு பாலங்கள் மற்றும் தரைப்பாலங்கள் ஆகியவற்றின் தற்போதைய நிலை, பொதுமக்களுக்கு நோய் பரவாமல் தடுக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் போன்ற பல்வேறு பணிகளை சிறப்பாக மேற்கொள்வதுடன் மழை, வெள்ளக்காலங்களில் ஏற்படக்கூடிய பாதிப்புகளை தடுக்கும் வகையில் ஊராட்சி ஒன்றிய கண்மாய்கள் மற்றும் குளங்களில் ஆக்கிரமிப்புகள் ஏதுமின்றி கண்காணிக்க சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர்.ஜெ.லோகநாதன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.சாந்தி, மாவட்ட தீயணைப்பு அலுவலர் திரு.ஹக்கீம்பாஷா, புதுக்கோட்டை சார் ஆட்சியர் திரு.எஸ்.பி.அம்ரித்,இ.ஆ.ப., உதவி ஆட்சியர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பேரூராட்சி செயல் அலுவலர்கள், மருத்துவ அலுவலர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**